செ.வெ.எண்.1007 நாள் 16.11.2010

**பத்திரிக்கைச் செய்தி**

**முதுநிலைப் பட்டயம் வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வேளாண் உற்பத்தியில் பயிர் பாதுகாப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பயிர் பாதுகாப்பில் தேவையான பயிற்சி அளித்தலும், பயிர் பாதுகாப்பில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதலும், விவசாயிகளின் நிலங்களில் பயிர் பாதுகாப்புக்கான எலி ஒழிப்பு போன்ற செயல் விளக்கங்களை நடத்துவதும் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

எனவே, பயிர் பாதுகாப்புத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடும் வகையில், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்தின்கீழ் ஐதராபாத்தில் செயல்படும் தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவனமும் இணைந்து பயிர் சுகாதாரத்தில் முதுநிலைப் பட்டயம் வழங்க முடிவு செய்துள்ளன.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை அரசுச் செயலாளர் (வேளாண்மைத் துறை) முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் இன்று **(16.11.2010)** தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. அப்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ப. முருகேச பூபதி அவர்களும், தேசிய பயிர் சுகாதார மேலாண்மை நிறுவனத்தின் இயக்குநர் தலைவர் முனைவர் கே. சத்யகோபால், இ.ஆ.ப. அவர்களும் உடன் இருந்தார்கள்.

ப. முருகேச பூபதி, 16/11/10
துணைவேந்தர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

16/11

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9